# 4 இதயம் அழுகிறது



சின்னதோர் குற்றம்தான்
செய்தாய் அதற்காக
பென்னம் பெரிய
பிரம்பாலே உன்னுடைய
பொன்னான கைகளினை
புண்ணாக்கி விட்டேனா?

உண்மையிலே அன்றுமிக
உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன்
ஏங்கி வகுப்பறையுள்
இருந்து நீ அழுததனை
தாங்க முடியாது
தவித்தேனே அறிவாயா?

என்னை அறிவாய்
எனக்குள்ளே எப்போதும்
உன்னி கருக்கூட்டும்
உணர்ச்சிகளைத் தெரிந்துள்ளாய்.

உன் போன்ற மாணவரை
உயர்த்துவதில் நான் என்றும்
கண்ணாய் இருந்து
கரை சேர்க்க முயற்சிப்பேன்.

நட்போடு பழகி
நயக்க இலக்கியத்தைக்
கற்பிப்பேன் அதை மிகவும்
கவனமாய் கேட்டிருப்பாய்.

அன்று மட்டும் நீயேனோ
அலட்சியமாய் இருந்ததனைக்
கண்டு விட்டேன், அதனாலே
கடுங் கோபம் பொங்கியதால்
தண்டித்து விட்டேன்
தவறுக்காய் மிக நொந்தேன்.



பின்னால்தான் உன்னுடைய
பிரச்சினையை நானறிந்தேன்.
வாப்பாவை அன்று
''வாட்'' டிலே சேர்த்து விட்டு
சாப்பாடும் இன்றி வந்த
சங்கதியைச் சொன்னார்கள்.

இந்த வயதில்
ஏப்பமிட எழும் அலையை
வென்று விட வேண்டுமென்றா
விரைவாக ஓடி வந்தாய்?
வந்த களைப்பாலா
வகுப்பிலே சோர்ந்திருந்தாய்?

அன்ப, உன் துயரை
அறியாமல் நடந்தவற்றை
மன்னித்து அக்கனவை
மறந்துவிட மாட்டாயா?

என்று நினைத்து
எனக்குள்ளே அழுகின்றேன்.
அழுகைக் குரல் கேட்டா
அருகில் வருகின்றாய்?

''மன்னிக்க வேண்டும், சேர்
மறுபடியும் பாடத்தை
படிப்பிக்க வேண்டு'' மென
பணிவாக ஏன் கேட்டாய்?

உன்மேல் எனக் கென்றும்
உயிர், அதனால்தான்
பாடத்தை மீண்டும்
படிப்பிக்க முயல்கின்றேன்.
என்னால் படிப்பிக்க
இயலாது குமைகின்றேன்.

''நாளை படிப்போ''மென
நம்பிக்கை ஊட்டிவிட்டு
எழுந்து நடக்கின்றேன்
இதயம் அழுகிறது.





அன்பு முகைதீன்
- புதுப்புனல் -

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| குற்றம் | - | தவறு |
| அலட்சியம் | - | கவனமின்மை |
| குமைதல் | - | வருந்துதல் |
| கருக்கூட்டும் | - | உருவாகும் |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ''எனக்குள்ளே எப்போதும் உன்னி கருக்கூட்டும் உணர்ச்சிகளைத் தெரிந்துள்ளாய்'' என்பதன் வாயிலாக ஆசிரியர் எதனை வெளிப்படுத்த முயற்சிக்கிறார்?
2. குறித்த மாணவன் வழக்கமாக, பாடவேளைகளில் எவ்வாறு நடந்து கொள்பவன்?
3. ஆசிரியர் குறித்த மாணவனை அடிப்பதற்குக் காரணம் யாது?
4. ஆசிரியரால் பாடத்தைத் தொடர்ந்து நடாத்த முடியாமற்போன காரணம் யாது?
5. ஆசிரியர் - மாணவர் உறவை இப்பாடல் எவ்வகையில் சித்திரித்துக் காட்டுகின்றது?

## செயற்பாடு

நல்லாசிரியர், நன்மாணாக்கர் இலக்கணங்கள் குறித்துக் கட்டுரை வரைந்து, ஆசிரியர் வழிகாட்டலில் அவ்விலக்கணங்களை அலசுக.

# வேற்றுமை II

## ஏழாம் வேற்றுமை

**மணியின் கண் ஒளி**

**மாமரத்தில் குயில்**

இங்கு மணி, மாமரம் போன்ற சொற்கள் கண், இல் என்னும் உருபுகளை ஏற்று வருமொழிப் பொருட்களான ஒளி, குயில் போன்றனவற்றுக்கு இடமாக அமைந்தன. ஆகையால் இதன் பொருள் இடப் பொருளாகும். எழுவாயை இடப்பொருளாக வேறுபடுத்தும் வேற்றுமையை ஏழாம் வேற்றுமை என்பர். இவ்வேற்றுமை கண்வேற்றுமை என்றும் பெயர் பெறும். கண், இல், கால், கடை, உள், இடம் முதலான இருபத்தெட்டு உருபுகள் ஏழாம் வேற்றுமைக்குரியதென நன்னூலார் கூறுவார். ஏழாம்வேற்றுமை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்களுள் ஒன்றைத் தனக்கு இடமாகக் கொண்டு வரும்.

பொருள் இடமாதல் - மணியின் கண் ஒளி.
- மரத்தின் கண் கிளி.

இடம் இடமாதல் - ஊரின் கண் இல்லம்.
- ஆகாயத்தின் கண் பருந்து.

காலம் இடமாதல் - நாளின் கண் மணித்தியாலம் உண்டு.
- இளவேனிற் கண் வேம்பு பூக்கும்.

சினை இடமாதல் - கையின் கண் விரல் உண்டு.
- விரலின் கண் மோதிரம்.

குணம் இடமாதல் - கறுப்பின் கண் மிக்கது அழகு.
- இளமையின் கண் வாய்த்த செல்வம்.

தொழில் இடமாதல் - ஆட்டத்தின் கண் அபிநயமுண்டு.
- ஆடற்கண் பாடப்பட்டது பாட்டு.

## எட்டாம் வேற்றுமை

**தம்பியே! பாராய்**

**அப்பனோ! பாராய்**

இங்கு தம்பியே, அப்பனோ முதலான சொற்கள் உருபின்றி முறையே ஏகாரம், ஓகாரம் மிகுந்து விளிப்பொருளில் வந்துள்ளன. மேற்குறிப்பிட்ட உதாரணங்களில் படர்க்கைப் பெயரை முன்னிலையில் அழைப்பதாக ஏ, ஓ மிகுந்து வந்ததைப் போன்று ஈறு திரிந்தும், கெட்டும், இயல்பாகவும், ஈற்றயல் எழுத்து திரிந்தும் எட்டாம் வேற்றுமை விளிப் பொருளில் வரும். எனவே எட்டாம் வேற்றுமைக்கு முதலாம் வேற்றுமை போன்று உருபு இல்லை.

உதாரணம்:-

*அன்னாய் பாராய் - அன்னை - அன்னாய் - ஈறு திரிந்தது*

*நண்ப! இதைக் கேள் - நண்பன் - நண்ப ஈறு கெட்டது.*

*தம்பி சாப்பிட வா ! - தம்பி - இயல்பாய் வந்தது.*

*மக்காள்! கேளீர் - மக்கள் - ஈற்றயல் எழுத்துத் திரிந்தது.*

## விளியுருபு ஏற்காப் பெயர்கள்

தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் விளியுருபை ஏற்கமாட்டாத பெயர்களாகும். படர்க்கைப் பெயர்களுக்குள் அவன் முதலிய சுட்டுப் பெயர்களும் எவன் முதலிய வினாப் பெயர்களும் தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும் விளியுருபை ஏற்கமாட்டதவை. ஆயினும் யான், நான் என்னும் தன்மை ஒருமைப் பெயர்கள் ''என்'' எனத் திரிந்து நின்று வேற்றுமை உருபுகளை ஏற்கும். இது போல யாம், நாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர்கள் முறையே எம், நம் எனத் திரிந்து நின்று வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

உதாரணம்:- யான் } என்னை, என்னால், எனக்கு
நான் } என்னை, என்னால், எனக்கு
யாம் } எம்மை, எம்மால், எமக்கு
நாம் } நம்மை, நம்மால், நமக்கு

நீ என்னும் முன்னிலைப் பெயர் உன் எனத் திரிந்து நின்று வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

உதாரணம்:- நீ } உன்னை, உன்னால், உனக்கு

தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் முறையே தன் எனவும் தம் எனவும் திரிந்து வேற்றுமை உருபை ஏற்கும்.

உதாரணம்:- தான்} தன்னை, தன்னால், தனக்கு
தாம்} தம்மை, தம்மால், தமக்கு

## பயிற்சி

1. மிகவும் பொருத்தமான சொல்லையோ, சொற்களையோ கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. .................பொருளாதி அறுவகைப் பெயர்களுள் ஒன்றைத் தனக்கு இடமாகக் கொண்டு வரும்.
2. .................... பெயர்கள் விளியுருபை ஏற்க மாட்டாதவை.
3. ...................... வேற்றுமைகளுக்கு உருபு இல்லை.
4. ஏழாம் வேற்றுமையை ............. வேற்றுமை என்றும் அழைப்பர்.
5. இருபத்தெட்டு உருபுகளை உடையது .................. என நன்னூலார் கூறுவார்.

2. மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1.சிறுவன் கல்விச் செல்வத்தைப் பெற்றான். இங்கே செல்வத்தை என்பதில் உள்ள ஐ உருபு உணர்த்துவது

1. ஆக்கல் 2. அடைதல் 3. நீத்தல் 4. அடைதல்

2.கண்ணனது கட்டில் தேக்கமரத்தால் உருவாக்கப்பட்டது. இங்கு வந்துள்ள மூன்றாம் வேற்றுமை உருபு

1. ஆல் 2. அது 3. இல் 4. பட்டு

3.ஊரில் நின்று வந்த மாணவன். இதில் வந்துள்ள சொல்லுருபு

1. வந்த 2. நின்று 3. இல் 4. அன்

4. ஒழுக்கத்தில் உயர்ந்தவர் நாவலர் பெருமான். இங்கே வந்துள்ள இல் என்பது

1. ஐந்தாம் வேற்றுமை 2. ஏழாம் வேற்றுமை
3. நான்காம் வேற்றுமை 4. ஆறாம் வேற்றுமை

5. நாவினால் சுட்ட வடு. இங்கே வந்த ஆல் உருபு உணர்த்தி நிற்பது

1. கருவி 2. கருத்தா 3. உடன்நிகழ்ச்சி 4. கோடற்பொருள்